மதுரை சீடு இளைஞர்கள் வழங்கும்

# புதிய வெளிச்சங்கள்

தனிச்சுற்று இதழ்

"வெளிச்சத்தின் வேராய் விளங்குவோம்
புது உலகின் மாதிரியாய் திகழ்வோம்"

டிசம்பர் 2010 - மார்ச் 2011 உதை - 3 வெளிச்சம் - 9

## மதுரை சீடு
## 1999 - 2011 ஆண்டு பணி நிறைவு மலர்

மதுரை சீடு A.S.கார்த்திக்பாரதியின் சமூகபணிகளுக்கு 2010-2011 ஆம் நிதியாண்டோடு 19வயது நிறைவடைகிறது. கார்த்திக்பாரதியின் சமூகபணிகள் குழந்தைகள், பெரியவர்கள், என மதுரையில் இந்திராநகர், P.T.காலனி, S.M.நகர், கரும்பாலை, மதிச்சியம், ஆழ்வார்புரம், கோரிப்பாளையம், மானகிரி, மேலக்கால் என விரிந்தும், பரந்தும் நடைபெற்றது.

பாரத பைந்தமிழ் பண்பாட்டு கழகம்,யுவபாரத், அறிவொளி இயக்கம், அறிவியல் இயக்கம், EVSS டச் ஸ்டோன், உறுதுணை, அமெரிக்கன் கல்லூரி NSS என பல தளங்களில் கார்த்திக்பாரதியின் சேவை எளியோரையும், நலிந்தோரையும் சென்றடைந்தன.

கார்த்திக்பாரதி 1998-99, 1999-2000 அகிய இரண்டு ஆண்டுகளில் அமெரிக்கன் கல்லூரி பணிகள் மற்றும் உறுதுணை (Dr.தாஜ்) ஊடாக Seed கருத்தாக்க பணிகளை செய்தார்.

1999-2000 ஆம் ஆண்டு Seed மாணவர் சேர்க்கை திட்டப்பணிகளுடன் 1999 டிசம்பர் முதல் மார்ச் வரை அர்ஜீன் சண்முகா இல்லத்தில் Seed நூலக வகுப்புகள் என Seed பரிணமித்தது. அதன் தொடர்ச்சியாக சீடுக்கென தனி கல்வி மையம் என்ற தேவையை உணர்ந்து, 2000 ஆம் ஆண்டு அமெரிக்கர்களின் நிதியுதவியோடு கரும்பாலையில் சீடு கல்வி மையங்கள் தொடங்கப்பட்டு 1999-2000இல் சம்பகுடியிலும் 2000-2001இல் கரும்பாலையிலும் 2002-2003 இல் தத்தனேரியிலும் கார்த்திக்பாரதியின் பணிகள் நிலைகொண்டன.

2010-11 ஆம் நிதியாண்டோடு சீடு பணிகளின் வயது 12 ஆண்டுகள் சீடு கல்வி மையங்களுக்கு 11 ஆண்டுகளும் நிறைவடைகின்றன. மதுரை சீடு நிறுவனமாக்கப்படவேண்டும் என்ற கருத்தாக்கம் எழுந்தபோது

உடனிருந்தவர்களில் முதன்மை பெற்றவர்கள் அன்பரசன் மற்றும் கிருஷ்ணவேணி, P.மணிகண்டன், மோகன், தங்கவேலாயுதம், சுந்தர்ராஜன், பாலமுருகன், பாஸ்கர்ராஜா, போன்றவராவர். பின்னர் ஆசிரியை மாரியம்மாளின் உறுதுணையும், மன்சூர்அலி மெல்லியல்அண்ணாமலை, ஆண்டர்சன் குடும்பம், லௌரா, ஜான்பாட்ஸ், ஈவ்லின், பாரிகணேசன், அருள்தங்கராஜ், ஹீனா, சந்திரமோகன், பிஜு மற்றும் அருண்குமார் பங்களிப்பும் மதுரை சீடுக்கு வலு சேர்த்தது.

1999 ஆம் ஆண்டு சீடு உருவாகியதின் நோக்கங்களை மறு உருவாக்கம் செய்து மதுரை சீடு 2007-08ஆம் அண்டு பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக மாற அன்பரசன் உற்ற துணையாக இருந்தார், என்பதும் குறிப்பிடத்தக்கது.

2010-11 ஆம் ஆண்டின் நிறைவில் மதுரை சீடு 3 பொறியாளர்கள், 6 ஆசிரியர்கள், 2 வழக்கறிஞர்கள், 2 Phd மாணவர்கள், 10க்கும் மேற்பட்ட காவலர்கள், 4 சமூகபணியாளர்கள் அரசு ஊழியர்கள், மருந்தாளுநர், டெக்னீஷியன்கள், மற்றும் நூற்றுக்கணக்கான பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளது, என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் வறுமைக்கு எதிராக கல்வியை ஆயுதமாக்கி வளம் பெற்ற மனிதர்களை உருவாக்க எதிர்காலத்தில் பாடுபடும்.

## அன்பரசன் எனும் தனித்துவம்

சீடு வரலாற்றில் புதிய வெளிச்சங்கள் என்ற பட்டியலில் அன்பரசன பெயர் பிரதான இடம் பிடிக்கிறது. ஆம் நண்பர்களே! வாய் சொல்லில் வீரம் தன் சுகம், தன் நலம் என கலங்கிய குட்டைகள் மத்தியில் நதியெனும் பிரவாகம் எமது தோழர் அன்பரசன்.

திட்டங்கள் என்றும் கனவுகள் என்றும் முற்போக்கு என்றும் உலகம் பல காண்போம். என்றும் பேசுவோர் மத்தியில் இயங்கியல் கொள்கை உள்ளம் கொண்டவர் அன்பரசன்.

சராசரி மாணவராய் அறியப்பட்ட போதும் உழைப்பால் உயர் நிர்வாக திறன் பெற்ற அன்பரசன் பங்கு கொண்ட சீடு வரலாறு 2002 முதல் 2011 வரை தனி முத்திரை பதித்து நிற்கிறது. உருவம் சிறிது என ஏளனம் செய்தவர்கள் அன்பரசனின் கீர்த்தியறிந்து அன்பரசனின் வயதை விட குறைந்தவர்களை அங்கீகாரம் செய்ய முனைவது பாராட்டப்பட வேண்டியதல்லவா!

சீடு உறுப்பினர்களிலே குடும்ப அளவில் இருமுதுகலைப் பட்டம் என உச்சம் பெற அன்பரசனே காரணம் என அனைவரும் அறிவோமாக! விட்டு கொடுக்கும் மனப்பக்குவமும், உறவுகளை விட்டுக் கொடுக்காத முதிர்ச்சியும் அன்பரசனின் சிறப்பான குணாதிசயங்கள்.

அன்பரசன் செய்தால் சரியாய் இருக்கும் என்ற கோட்பாடு உணர்ந்து அன்பரசனை தொடர்ந்து கரும்பாலையில் இன்று தொழிற்முறை சமூக பணியாளர் மூவர் உருவாகியிருப்பது, அன்பரசனின் அடியொற்றிதான் என நாங்கள் சொல்வது மிகையல்ல.

வாழ்க்கையை எளிமையாக எதிர்கொண்டும் உறவுகளின் அர்த்தம் தெரிந்தும் நம்மிடையே உழைப்பின் மேன்மை தெரிந்தும் நம்மிடையே சக மனிதன் ஒருவன் வாழ்ந்தான் என்பதற்கு 25 வயது அன்பரசன் உதாரணம்

ஒருவரை சார்ந்து வாழ்வதும், உயர் நிலைக்கு பின் வந்ததும் மறவாத வாழ்வொன்றைப் புகைப்படமாய், மாறாத நினைவுகளாய் சுமார் 10 ஆண்டு காலம் சீடு உள்ளங்களில் அன்பரசன் கோலோச்சி வந்தார் எவ்வித கல்விப் பின்னணியும் இல்லாதக் குடும்பத்தை பட்டதாரிகள் நிறைந்த குடும்பமாக மாற அன்பரசனின் மாண்புமிகு குணங்கள் தான் காரணம் (இங்கு நண்பர் பெத்துராஜா நினைவு கூறப்பட வேண்டும். அவரே அன்பரசனையும், அவர் குடும்பம் சார்ந்தவர்களையும் சீடுக்கு அறிமுகப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது).

சீடு இன் ஆண்டு விழாக்கள், கலை விழாக்கள், A.S.K.B. விருது வழங்கும் விழாக்கள், விளையாட்டு விழாக்கள், கல்வி சுற்றுலாக்கள், விருந்தினர் வரவேற்பு விழாக்கள், தேன்கூடு சேமிப்பு போன்றவற்றில் அன்பரசனின் பங்கு போற்றதக்கது.

வளரும் நாடென அறியப்படும் இந்தியச் சூழலில் வறுமையும், குடும்பப் பின்னணியும் வாழ்தலுக்கான போராட்டம் நெடியதாகஇருக்கிறது. மதீப்பீடுகள் சரியும் போது தன்னை சார்ந்தோரை நசுக்கியும், புண்படுத்தியும், தமக்கென வாழ்வோரை நாம் குறை சொல்லல் ஆகாது அது இன்றைய நெருக்கடி வாழ்க்கையின்மோசமான வெளிப்பாடு ஆனால் நண்பர்களே! தாம் படித்து தன்னை சார்ந்தோரையும் படிக்க வைத்து வறுமைக்கு எதிராக கல்வியை ஆயுதமாக்க முன் நின்ற

தம்பிகளில் முதன்மையாக நின்ற அன்பரசனை நாம் நம்பிக்கையின் கீற்றாகவும், புதிய வெளிச்சமாகவும் கொள்ளலாம். அல்லவா!

அதிர்ஷ்டத்தாலும் குறுகிய சூழலில் தன்னை வெளிப்படுத்தி பெரிய ஆளாக வருவது ரொம்ப ஆச்சர்யமில்லை. ஆனால் உழைத்தும், உழைப்பின் பின் தாமதமாக வரும் பலன்களும் தரும் ருசி அதீதமானது. அன்பரசன் எனும் நற்கனி உழைப்பின் பலனாக நம்மிடையே உலா வந்ததாகும். அன்பு எனும் கனி தனித்துவமிக்கது. மதுரை சீடு இளைஞர்களிலே முதன் முறையாக முதுகலை சமூகபணி படித்த அன்பரசனின் குணமும், கொள்கையும் முரண்படாதவை. நிறுவன மேலாண்மையும், அடித்தட்டு மக்களின் வளர்ச்சிக்கு உதாரணமுமாக விளங்கும் அன்பரசன், வாழ்வு அவர் நினைத்தபடி நலமுடன் நடக்கட்டும் அவரின் கனவுகளும், இலட்சியங்களும் இனிதென நிறைவேற மதுரை சீடு வாழ்த்துகின்றது. மதுரை சீடு செயலர், பொருளாளர் பொறுப்பு சுழற்சி முறையில் மாற்றத்தக்கது என்பதன் படி நான்கு ஆண்டு கால நிதி அறங்காவலர், செயலர், பொருளாளர், பணிகளை செவ்வென நிறைவேற்றிய காலங்களை நினைவு கூறுகின்றோம்.

நன்றி அன்பரசன் அவர்களே.

இவண்

**மதுரை சீடு இளைஞர்கள்**

மற்றும்

**A.S.கார்த்திக் பாரதி**

**நிறைவான கல்விப்பணிகளில் V.மாரியம்மாள், A.S.கார்த்திக்பாரதி, M.மன்சூர்அலி**

**மதுரை சீடு இளைஞர் பேரவை தலைவர்கள் 2010 - 2011**

**M.தங்கலெட்சுமி, K.அழகிரி**

புதிய வெளிச்சங்கள் பொறுப்பாளர் - **C.கற்பகஜோதி**


தொடர்புக்கு.

**MADURAI SEED YOUTH FEDERATION (MSYF)**
**MADURAI SEED**
**Arjun Shanmuga Illam, 439/1 East Street,**
**Karumbalai, Madurai - 625 020. Ph : 0452 - 2537670, 98948 05446**
**E-mail : maduraiseed1999@gmail.com Web : www.madurai-seed.org**